# தமிழ்

## தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்திமலர்

அக்டோபர் 2019 - ஜனவரி 2020



# ஆ.சிவசுப்பிரமணியனுக்கான டாக்டர் பட்டம் தமிழுக்கான கௌரவம்

ஆ.சிவசுப்பிரமணியனுக்கான டாக்டர் பட்டம் தமிழுக்கான கௌரவம்

நன்றி: தமிழ் இந்து
23 - 10 - 2019

# தமிழி

**தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்திமலர்**

**அக்டோபர் 2019 - ஜனவரி 2020**

பதிப்பாசிரியர்
பேராசிரியர் கோ.பாலசுப்ரமணியன்
துணைவேந்தர்

பொறுப்பாசிரியர்கள்
முனைவர் தெ.வெற்றிச்செல்வன்
உதவிப் பேராசிரியர்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை

முனைவர் மா.அறிவானந்தன்
உதவிப் பேராசிரியர்
சமூகஅறிவியல் துறை

ஒளிப்படங்கள்
கேள்வி - காட்சி மையம்

தரவாக்கம்
மக்கள் தொடர்புப் பிரிவு

மலரழகு
மு.திருநாவுக்கரசு

வெளியீடு
பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மின்னஞ்சல்
thamizhitu@gmail.com
இணையதளம்
www.tamiluniversity.ac.in


## தலையங்கம்

வணக்கம். தமிழி எனப் பெயர் சூட்டப்பட்டு, முதல் இதழாக வெளிவந்த, நமது செய்திமலர் ஆக்ககரமாக உள்ளது எனப் பலரது பாராட்டைப் பெற்றுள்ளது. இது குறித்துக் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டோருக்கு நன்றி.

நீண்டகாலக் கோரிக்கையாகவும் மிகுந்த எதிர்பார்ப்பாகவும் இருந்த, தொகுப்பு நல்கை 5.85 கோடியிலிருந்து உயர்த்தப்பட்டு, 24 கோடியே 91 இலட்சத்து 96 ஆயிரமாக வழங்கப்பட்டதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர், மதிப்புயர் தமிழ் வளர்ச்சித்துறைச் செயலர் ஆகியோருக்கு நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

நீண்டகாலமாக, பல்கலைக்கழக வளாகத்துக்குச் சுற்றுச்சுவரின்றி இடர்ப்பட்டு வந்த நிலையில், இப்போது ஒரு பகுதி சுற்றுச்சுவர் கட்டும் வேலைகள் முடிந்து, வளாகம் புதுப்பொலிவு பெற்றிருக்கிறது. அடுத்த கட்ட நல்கைகள் கிடைத்தால், வளாகச் சுற்றுச்சுவர் பணிகள் நிறைவு பெறும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழக 12 - ஆவது பட்டமளிப்பு விழா, குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்டாலும், செவ்வனே நிகழ்ந்தேறியதை எண்ணும்போது, பல்கலைக்கழகக் கல்விநிலை மற்றும் அலுவல்நிலைப் பணியாளர்களின் கடின உழைப்பையும், மதிப்புறு முனைவர் பட்டங்கள் வழங்கப்பட்ட ஆளுமைகள் குறித்தும், பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா மாண்பு குறித்தும் ஊடகங்கள் பெருமைப்படுத்தி எழுதியதையும் நன்றியோடு இங்கு நினைவுகூரவேண்டும். இது குறித்த செய்தி ஊடகப் பதிவும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ந்து, ஆய்வுத் திட்டப்பணிகளும் பிற பணிகளும் முடுக்கி விடப்பட்டு வருகின்றன. இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுத் திட்டங்கள் முடிக்கப்பட்டுத் தகுதியுள்ளவை நூலாக்கம் பெறும் பொழுது ஆய்வுலகிற்கு அணி சேர்க்கும் என்று நம்பலாம்.

**வாழ்க தமிழ். வளர்க தமிழ்ப் பல்கலைக்கழகம்.**

முனைவர் கோ.பாலசுப்ரமணியன்



# இந்தியாவின் முதன்மை நூலாகத் திருக்குறளை அறிவிக்க வேண்டும் - பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் பேச்சு

தமிழ்ப் பல்கலைக்கழக 12 - ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சரும் பல்கலைக்கழக இணைவேந்தருமான திரு. க. பாண்டியராஜன் பேசியதாவது: திருக்குறளை உலக நூலாக யுனெஸ்கோ அறிவிக்க வேண்டும் என, மொரீசியஸ் நாட்டின் முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் பரசுராமன் வலியுறுத்தியுள்ளார். இதே போல, திருக்குறளை இந்தியாவின் முதன்மை நூலாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். இது தொடர்பாக, மத்திய அரசுக்கு ஆளுநர் பரிந்துரைக்க வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மூலம் செயல்படுத்தப் படும் தமிழ் வளர் மையத்தை உலக அளவில் ஆயிரம் இடங்களில் அமைக்க விரும்புகிறோம். இதற்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்கு மத்திய அரசின் ஆதரவு தேவைப்படுகிறது. எனவே, இம்மையம் உலகம் முழுவதும் அமைய மத்திய அரசுக்குத் தமிழக ஆளுநர் பரிந்துரை செய்ய வேண்டும். கடந்த ஆண்டு, மொரீஷியஸ் உட்பட 16 நாடுகளில் இம்மையம் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, மற்ற இடங்களில் அமைக்க, மத்திய அரசு ஆதரவு அளிக்கவேண்டும். கலைச்சொற்களை உருவாக்கக் கூடிய சொற்குவைத் திட்டத்துக்கு உலகத் தமிழர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பு உள்ளது. இத்திட்டத்தின் மூலம், புதிய கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# பன்னிரண்டாவது பட்டமளிப்பு விழா

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பன்னிரண்டாவது பட்டமளிப்பு விழா, 2019 அக்டோபர்த் திங்கள் 22 - ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கரிகாற்சோழன் கலையரங்கில் நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநரும், பல்கலைக்கழக வேந்தருமான திரு பன்வாரிலால் புரோகித் அவர்கள் தலைமை ஏற்று, பட்டங்களை வழங்கினார்.

வரவேற்புரை ஆற்றிய துணைவேந்தர், தமிழ் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கி தமிழ்நாடு அரசு, ஊக்கம் அளிப்பதை நன்றியோடு நினைவுகூர்ந்தார். முதுகலைத் தமிழ், வரலாறு ஆகிய பாடங்களில், ஒருங்கிணைந்த முதுகலை ஐந்தாண்டு பட்டப்படிப்புகளும், நாடகத் துறையில் நிகழ்த்துக்கலையில் முதுகலைப்படிப்பும், இவ்வாண்டில் தொடங்கப்பட்டுள்ளன என்றும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பதிப்புத்துறை தமிழ்மொழி, இலக்கண, இலக்கியம், அகராதிகள், களஞ்சியங்கள் உள்ளிட்ட பல்பொருள் குறித்த 508 சிறந்த நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுச் சாதனை படைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார். நடுவண் அரசின் தேசிய உயர்கல்வி ஆணைய (RUSA) நல்கை ரூ.20 கோடி, நம் பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்துள்ளது எனக் குறிப்பிட்ட துணைவேந்தர், உலகளாவிய அளவில் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டைப் பாதுகாத்துப் பரவலாக்கம் செய்யும் நோக்கத்தில், தமிழ்நாடு அரசின் சிறப்புப் பெருந் திட்டங்களாகத் தமிழ்வளர்மையம் (Developing Centre for Tamil) மற்றும் தமிழ்ப் பண்பாட்டு மையம் (Tamil Cultural Centre) நிறுவப்பட்டு, பணிகள் நடைபெற்றுவருகின்றன எனக் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு அரசின், அயலகத்தமிழர் நலன்பேணும் சிறப்புத்திட்டத்தின் அடிப்படையில் மொரிசீயஸ், பர்மா ஆகிய நாடுகளில் உள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தமிழ்மொழி, பண்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சி, விரைவில் தென்ஆப்பிரிக்காவிலும் நடத்தப்பட உள்ளது. மேலும் பிஜி மற்றும் பிரிட்டிஷ் கயானா நாடுகளில், தமிழ்மொழி கற்றல், கற்பித்தலை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு ரூ.30 இலட்சம் உதவி செய்துள்ளது, குறிப்பிடத்தக்கது என்றார்.

பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்திய, சென்னைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர், பேராசிரியர் ச.ப.தியாகராசன், தம் உரையில் மொழியாய்வு, அறிவியல் ஆய்வு, மருத்துவ ஆய்வு போன்ற ஆய்வுத் திட்டங்களை உருவாக்குவதோடு, நமது சங்க இலக்கியங்களிலும், பின்வந்த இலக்கியங்களிலும் கூறப்பட்டிருக்கும் கருத்துச் செல்வங்களைப் பல துறைகள் இணைந்து, வெளிநாட்டவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஆய்வு வழிமுறைகளைப் பின்பற்றி ஆய்வுத் திட்டங்களாகச் செயல்படுத்தலாம். இதன் மூலமாக, நாட்டிற்குப் பயன்படும் நதிநீர்ஆய்வு, மருத்துவஆய்வு, உள்ளிருக்கை புனர்ஆய்வு, வான்-விண்கலை வளர்ப்பு ஆய்வு, நாட்டின் பாதுகாப்புத் துறை வளர்ஆய்வு போன்றவற்றினை முன்னிலைப் படுத்தி, உள்நாட்டு வெளிநாட்டு நிதி ஆதாரங்களைப் பெற்றுச் செயல்படுத்தலாம். இதுபோன்ற திட்டங்களை உருவாக்கும்போது, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துறைகள் ஒருங்கிணைந்து, நம் நாட்டிலுள்ள சிறப்புப் பல்கலைக் கழகங்களுடன் கைகோர்த்துச் செயல்பட்டால், UGC / MHRD / ICSSR / AYUSH / DST போன்ற, நிதி நல்கும் துறைகள் நிதியுதவி கொடுக்கும் வாய்ப்பு, பெரிய அளவில் உள்ளது எனக் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு அரசின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சரும், பல்கலைக்கழக இணை




வேந்தருமான திரு.க. பாண்டியராசன் அவர்கள் விழாவில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றுகையில்,

கூண்டுக் கிளிக்குப்
பிறந்த
குஞ்சுக்கிளிக்கு
எப்படி
முளைத்தது
சிறகு?

என்று எழுதியவரும், மதிப்புறு முனைவர் (D.Litt) பட்டத்தினைப் பெற்றவருமான (வண்ணதாசன்) கல்யாண்ஜியின் கவிதையை மேற்கோள் காட்டிப் பேசியது அனைவரையும் ஈர்த்தது.

இவ்விழாவில், மொரிசீயஸ் நாட்டு முன்னாள் அமைச்சரும், உலகத் திருக்குறள் மைய நிறுவனரும், சமூக சேவகருமான ஆறுமுகம் பரசுராமன், தமிழ்நாட்டின் மூத்த நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளரும், இலக்கியம், வரலாறு, சமயம், பண்பாடு குறித்துப் பல நூல்களை எழுதியுள்ளவருமான அறிஞர் ஆ.சிவசுப்பிரமணியன், தமிழ்நாட்டின் நவீன எழுத்தாளரும் கவிதை, சிறுகதை இலக்கியங்கள் பலவற்றைப் படைத்தவருமான வண்ணதாசன் (கல்யாண்ஜி)எனும் சி.கல்யாணசுந்தரம் ஆகியோருக்கு மதிப்புறு முனைவர் (D.Litt) பட்டத்தினை வழங்கிய, தமிழ்நாடு ஆளுநரும் மாண்புமிகு பல்கலைக்கழக வேந்தருமான பன்வாரிலால் புரோகித், தமிழ்ப் பல்கலைக்கழகத் துறைகளில் முதல் மதிப்பெண் பெற்ற 4 மாணவர்களுக்குத் தங்கப்பதக்கங்களையும் வழங்கினார்.

இப்பட்டமளிப்பு விழாவில், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பயின்ற 150 மாணவர்களுக்கு முனைவர் பட்டங்களும், 247 மாணவர்களுக்கு ஆய்வியல் நிறைஞர் பட்டங்களும் 4 மாணவர்களுக்குக் கல்வியியல் நிறைஞர் பட்டங்களும் 47 மாணவர்களுக்கு முதுநிலைப் பட்டங்களும் 147 மாணவர்களுக்குக் கல்வியியல் இளங்கலைப் பட்டங்களும் தொலைநிலைக் கல்வி வழியாகப் பயின்ற 9421 மாணவர்களுக்குப் பல்வேறு நிலைகளில் பட்டங்களும் வழங்கப்பட்டன. இவ்விழாவில், தமிழ்நாடு அரசின் தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன் இ.ஆ.ப., பதிவாளர் (பொ) பேராசிரியர் முனைவர் கு. சின்னப்பன், பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

# "தமிழ்ப் பண்பாட்டில் நாட்டார் சமயங்கள்" சிறப்புக் கருத்தரங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையும் மன்னன்பந்தல் அ.வ.அ.கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து, 04.12.2019 அன்று " தமிழ்ப் பண்பாட்டில் நாட்டார் சமயங்கள்" என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம், துணைவேந்தர் முனைவர் கோ. பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது.

ஒரு சமூகம், பன்முகத் தன்மையில்தான் படைப் பாற்றல் பெறும். பன்முகத் தன்மையை இழந்த ஒரு சமூகம் அதனுடைய கற்பனை வளத்தை இழந்துவிடும். குறிப்பாக, பண்பாடு, மொழி போன்ற பன்முகத் தன்மைகள் பாதுகாக்கப்படவேண்டும். சமயம் என்ற சொல்லைப் பார்க்கும்போது அதோடு சேர்த்து, மதம் என்ற சொல்லையும் நாம் கருதிப்பார்க்காமல் இருக்க முடியாது. சிலப்பதிகாரத்தில் 'சமயப்பொறை' என்ற சொல் வருகிறது. 'சமயம்' என்ற சொல்லுக்கு 'மரபு' 'கொள்கை' என்ற பொருள்களும் உள்ளன. இருந்தாலும், தமிழில் நாட்டார் வழிபாடுகளைக் கொள்கை என்று சொல்ல முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்கள், சிறுதெய்வம் பெருந்தெய்வம் என்று வகைப்படுத்துகிறார்கள். நாட்டுப்புறத் தெய்வங்கள் பெரும்பான்மையாக எல்லைப்புறத்தில் காவல் தெய்வங்களாக உள்ளன. இத்தெய்வங்கள் அனைத்தும் பயிரைக் காத்தல், நீரைக் காத்தல், விளைச்சலைக் காத்தல் என்ற வகையில் காவல் தெய்வங்களாக இருக்கின்றன என்றார், துணைவேந்தர்.

முன்னதாக, முனைவர் ஆ.சண்முகம்பிள்ளை வரவேற்றார். துறைத்தலைவர் முனைவர் இரா. காமராசு அறிமுகவுரை நிகழ்த்தினார். மன்னன்பந்தல் தமிழாய்வுத் துறைத்தலைவர் முனைவர் சு.தமிழ்வேலு வாழ்த்துரை வழங்கினார். பாளையங்கோட்டை நாட்டார் வழக்காற்றியல் மைய முன்னைத் தலைவர், பேராசிரியர் ஆ. தனஞ்செயன் மையக்கருத்துரை வழங்கினார். புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனப் பேராசிரியர் முனைவர் ச. பிலவேந்திரன், தக்கலை, கீற்று வெளியீட்டாளர், எழுத்தாளர் ஹெச். ஹமீம் முஸ்தபா ஆகியோர் உரையாற்றினர். உதவிப்பேராசிரியர் முனைவர் சீ. இளையராஜா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். உதவிப்பேராசிரியர் முனைவர் நா.மாலதி நன்றி கூறினார்.






# “தமிழ் இலக்கியங்களில் தொல்லறிவியல் சிந்தனைகள்” - கருத்தரங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்லறிவியல் துறை சார்பாக, “தமிழ் இலக்கியங்களில் தொல்லறிவியல் சிந்தனைகள்” என்ற தலைப்பில், *03.10.2019* அன்று கருத்தரங்கம் நடைபெற்றது. தலைமை வகித்துப் பேசிய துணைவேந்தர், தம் உரையில் குறிப்பிட்டதாவது: சங்ககாலப் புலவர் பிசிராந்தையார் கூறுகையில், ஒரு மனிதனுக்கு ஏன் நரை வருகிறது என்றால், துன்பம் மற்றும் மனக்கவலையால் தான். வாழ்க்கையில் எல்லாம் இன்பமாக அமைந்து விட்டால், நரை தோன்றாது. என்னுடைய மாட்சிமை பொருந்திய மனைவி, நல்ல குணங்களை உடையவள், அதேபோன்று என் பிள்ளைகளும் அறிவுநிறைந்த பிள்ளைகளாகப் பிறந்து விட்டார்கள். நான் என்ன நினைக்கின்றேனோ, அதைத் தான் என் மனைவியும் என் பிள்ளைகளும் நினைப்பார்கள். அதேபோல, நான் என்ன நினைக்கின்றேனோ அதைச் செயலாற்ற என் ஏவலாட்கள் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த நாட்டை ஆளக்கூடிய மன்னன், மக்களுக்கு நல்லது செய்பவராக இருக்கிறார். என் ஊரில் உள்ள சான்றோர் யாருக்குப் பணிய வேண்டுமோ அவர்களுக்குப் பணிந்தும், யாருக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமோ, அவர்களுக்கு மதிப்புக் கொடுத்தும், ஐம்புலன்களையும் அடக்கி வாழ்கிறார்கள் அவர்கள் வாழ்கிற ஊரில் இருப்பதால், எனக்கு நரை வரவில்லை என்று குறிப்பிடுகிறார்.

அறிவியல் என்றால் என்ன? இயற்கையையும், மனித வாழ்க்கையையும் உற்றுநோக்கி அதில் இருக்கக்கூடிய புரிதல்களை நிருபித்துக் காட்டுவது என்பதுதான் அறிவியல். எனவே, சங்க காலத்திலேயே சொல்லப் பட்டது, நோய் நொடியற்று வாழவேண்டுமானால் மன நிம்மதியோடு மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று அறிவியல் பூர்வமாகச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாமே தமிழில் உள்ளது என்று பெருமை பேசுவதைவிட, இருப்பதை முறையாக ஆராய்ச்சி செய்து உலகத்திற்கு அறிவிக்கவேண்டும் என்றார், துணைவேந்தர்.

முன்னதாக, துறைத்தலைவர் முனைவர் ந.நாகராசன் வரவேற்றார். அறிவியல்புல முதன்மையர் முனைவர் க.சங்கர் வாழ்த்துரை வழங்கினார். திருச்சி, தேசியக் கல்லூரித் தமிழாய்வுத்துறைப் பேராசிரியர் முனைவர் ச. நீலகண்டன், விளாங்குடிப் புலவர் ம. மருதமுத்து ஆகியோர் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர். உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. சீனிவாசன் நன்றி கூறினார்.

# தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குச் சிங்கப்பூர் ஆசிரியர்கள் மாணவர்கள் வருகை

சிங்கப்பூரில் உள்ள உமறுப்புலவர் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் திரு ராமன், திருமதி சுமதி ஆகியோர், எட்டு மாணவர்களுடன், தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடி மையம், நூலகம், மற்றும் பல்துறை ஆராய்ச்சிகள் குறித்து அறியும் நோக்கத்தோடும் ஆர்வத்தோடும் டிசம்பர் 3 அன்று வருகைபுரிந்தனர். அவர்களைப் பல்கலைக்கழக துணைவேந்தர் வரவேற்றுக் கலந்துரையாடினார். பல்கலைக்கழகப் புலங்கள், துறைகள், கடந்த காலத்திலிருந்து சமகாலம் வரையான தொடர் ஆராய்ச்சி மற்றும் கல்விச்செயல்பாடுகள், சமூகப் பங்களிப்புகள் இவை குறித்து எடுத்துரைத்தார். அயல்நாடுகளுடன் மேற்கொண்டுள்ள ஆசிரியர் மாணவர் பரிமாற்றங்கள், புரிந்துணர்வு உடன் படிக்கைகள் குறித்து, சிங்கப்பூர் மாணவர்களும் ஆசிரியர்களும் கேட்டறிந்தனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்குக் கல்வி, ஆராய்ச்சி நிலையில் வரையறுத்த நாட்டு எல்லைகள் என்று, எதுவுமில்லை. உலகளாவிய நிலையில், தமிழ்ப் பல்கலைக்கழக ஆராய்ச்சிகள் விரிந்து பரந்திருப்பது இதன் தனிச்சிறப்பு என்றார். தாய்வீட்டுச் சீதனமெனத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை அயல் நாட்டுத் தமிழர்கள் கொண்டாடி, நிறுவன வளர்ச்சிக்கும், தாங்கள் குடிபுகுந்துள்ள நாட்டில், தமிழ் வளர்ச்சிக்கும் பங்களிக்கவேண்டும். உலகத் தமிழரிடையே மொழி இழப்பின்றிப் பாதுகாக்க, அயலகத் தமிழர்கள் வீட்டிலும் வெளியிலும் தமிழைப் பேசிப்புழங்குவதன் மூலமாக, தொடர்ந்து வளர்த்தெடுக்கவேண்டும் என்று துணைவேந்தர் கேட்டுக்கொண்டார்.

பிறகு, புகழ்பெற்ற முதுமுனைவர் வ. ஐ. சுப்பிரமணியம் நினைவு நூலகத்தைப் பார்வையிட்டனர். நூலகத்தந்தை அரங்கநாதன், கூண்டு வண்டி மூலம் இந்தியாவின் முதல் நடமாடும் நூலகம்(1931) நடத்திய கனகசபைப்பிள்ளை, ஆகியோர் குறித்தும், பாவாணர், சாமி சிதம்பரனார், தண்டபாணி தேசிகர் போன்ற ஆளுமைகளின் நூல் கொடைகளையும் உள்ளடக்கி, நூலகத்திலிருக்கும் 1,80,000 நூல்கள், திருக்குறள் முதல்பதிப்பு நூல், பார்வை சார்ந்த மாற்றுத்திறனாளிகள் படிக்க, ப்ரெய்லி முறையில் பதிப்பிக்கப்பெற்ற அகராதி, திருக்குறள், பாரதியார் பாடல்கள் ஆகியன குறித்தும் நூலக இயக்குநர் முனைவர் சி. வேல்முருகன், அயல் நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் தெ.வெற்றிச்செல்வன், ஆகியோர் எடுத்து உரைத்தனர். சுவடிமையத்திலிருக்கும் வருவாய் ஆவணச்சுவடிகள், முடங்கல், மருத்துவ ஓலைச் சுவடிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். சுவடிப்பராமரிப்பு குறித்து ஓலைச்சுவடித்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் கலாஸ்ரீதர் மற்றும் பராமரிப்புப் பணியாளர்கள் விளக்கினர். முன்னதாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் கு.சின்னப்பன், துணைப்பதிவாளர் கோ. பன்னீர் செல்வம் ஆகியோர் வரவேற்று வாழ்த்துத் தெரிவித்தனர்.



# தென்னாப்பிரிக்கத் தமிழாசிரியர்களுக்கு இலக்கிய இலக்கணப் பேச்சுத்தமிழ்ப் பயிலரங்கம்

தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் சட்டப்பேரவையில் அறிவித்த திட்டத்தின்கீழ், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையின் ஒருங்கிணைப்பில், தென்னாப்பிரிக்காவிலுள்ள தமிழாசிரியர்களுக்காக 05.01.2020 முதல் 14.01.2020வரை, தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரத்தில், தமிழாசிரியர்களுக்கு இலக்கிய - இலக்கணம் மற்றும் பேச்சுத்தமிழ் குறித்து, பத்து நாட்களுக்குப் பயிலரங்கம் நடத்தப்பட்டது.

பயிலரங்கில் 123 தமிழாசிரியர்களும், இளந்தமிழ் மாணவர்களுக்காக நடத்தப்பட்ட தமிழ்ப் பண்பாட்டுப் ஆகியோரடங்கிய குழுவினர், பல்வேறு தலைப்புகளில் பங்கேற்பாளர்களுக்குப் பயிற்சியளித்தனர்.

தென்னாப்பிரிக்க அரசுப் பள்ளிகளில், தமிழ்மொழி வகுப்புகள் நிறுத்தப்பட்டு, முப்பதாண்டுகள் கடந்து விட்ட நிலையில், ஏறத்தாழ தமிழ்மொழி அழியும் சூழலில், மிகப் பொருத்தமான நேரத்தில், இப்பயிலரங்கம் நடத்தப்பட்டிருப்பது, மீண்டும் தமிழை உயிர்ப்புடன் செயல்பட வைத்திருப்பதாக, இப்பயிலரங்கத்தின் நிறைவு விழாவில் பங்கேற்ற தென்னாப்பிரிக்காவின் மூத்த தமிழ்ப் பற்றாளர்கள் உணர்ச்சிபொங்கத் தெரிவித்தனர். தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரம், நடால்



பயிலரங்கத்தில் 85 மாணாக்கரும் பங்கேற்றுப் பயனடைந்தனர். மைசூர் மொழியியல் பண்பாட்டு நிறுவனத்தின் மேனாள் துணை இயக்குநர், மொழியியல் துறைப் பேராசிரியர் முனைவர் சாம் மோகன்லால், அமெரிக்காவின் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் வாசு அரங்கநாதன், தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன், முனைவர் இரா. காமராசு, யோகா மையப் பயிற்றுநர் முனைவர் தங்கபாண்டியன், இசைப் பயிற்சியாளர் திருபுவனம் ஆத்மநாதன், நாட்டுப்புறக் கலைகள் பயிற்சியாளரான கலைமாமணி இளங்கோவன், மாகாணத்தின் பிற பகுதிகளில் உள்ள தமிழாசிரியர்கள், ஜோகன்னஸ்பர்க் மற்றும் கேப்டவுன் ஆகிய நகரங்களில் இருந்து தமிழாசிரியர்கள் பலர் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

இதைத் தொடர்ந்து, தமிழ்ப் பல்கலைக்கழகத் தமிழ் வளர் மையம் வாயிலாக, இணைய வழிச் சேவை அளிக்கவுள்ளதாக, இப்பயிலரங்கத்தின் நிறைவில் சான்றிதழ் வழங்கும் விழாவிற்கு அனுப்பிய செய்தியில், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிவிப்பு தந்திருந்தது, தென்னாப்பிரிக்கத் தமிழ்ச்சங்கங்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.




# மொழியியல் துறை சிறப்பு நிகழ்வு

*தமிழ்ப் பல்கலைக்கழக, மொழியியல் துறை சார்பாக 24. 10. 2019 அன்று, சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. துணைவேந்தர் முனைவர் கோ. பாலசுப்ரமணியன் தலைமையேற்றார். துறைத்தலைவர் முனைவர் கி. விஸ்வநாதன் வரவேற்றார். மொழிப்புல முதன்மையர் முனைவர் இரா. காமராசு, வாழ்த்துரை வழங்கினார். பிரான்ஸ், இந்திய தேசிய அறிவியல் உயராய்வு மையப் பேராசிரியர், அப்பாசாமி முருகையன் "புலம்பெயர் நாடுகளில் இந்திய மொழிகள்: தமிழ்மொழி இழப்பு மற்றும் தக்கவைப்பு" என்ற தலைப்பில், கருத்துரை வழங்கினார். உதவிப்பேராசிரியர் முனைவர் ப. மங்கையர்க்கரசி, உதவிப்பேராசிரியர் முனைவர் மா. இரமேஷ்குமார் முதலியோர் கலந்துகொண்டனர்.*



## அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 63 - ஆம் ஆண்டு நினைவுநாள் விழா

*தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 06 - 12 - 2019 அன்று அறிவுலக மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 63 - ஆம் ஆண்டு நினைவுநாள் விழா நிகழ்வுற்றது. இந்நினைவுநாள் நிகழ்ச்சியில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) முனைவர் கு.சின்னப்பன் அண்ணல் அம்பேத்கர் திரு உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினார்கள்.*




# அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் மற்றும் இசைப்போட்டிகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையின் சார்பாக, ஆபிரகாம் பண்டிதர் அறக்கட்டளை, தென்னாப்பிரிக்க ரெங்கசாமிப் பிள்ளை அறக்கட்டளை, பாரதி வித்யாலயா அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், இசைப்போட்டிகள் மற்றும் பரிசளிப்புவிழா 27 - 01 - 2020 அன்று நடைபெற்றன.

திருவையாறு, அரசர் கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் சண்முக.செல்வகணபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உதவிப்பேராசிரியர் முனைவர் செ.கற்பகம் வரவேற்க, அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர், முனைவர் ஆர். கே. குமார், திருச்சி, சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி இசைத்துறைத் தலைவர், முனைவர் செ.லலிதாம்பாள், தஞ்சாவூர் மிருதங்க வித்வான், இரா. செந்தில்குமார் ஆகியோர் உரையாற்றினர்.

இசைப்போட்டியில் கலந்துகொண்டு, வெற்றிபெற்ற மாணவர்களுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கோ. பாலசுப்ரமணியன் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார். தஞ்சாவூர் மகரிஷி வித்யாமந்திர் பள்ளியின் மாணவி, எ. பிரகதி முதல் பரிசும், தஞ்சாவூர் ரேடியன்ட் பன்னாட்டுப்பள்ளி, எ.எஸ். அபிராத் இரண்டாம் பரிசும், தஞ்சாவூர் டான்பாஸ்கோ பதின்மப்பள்ளி பி. தரன் மூன்றாம் பரிசும், திருநாகேஸ்வரம், அரசு மேனிலைப் பள்ளி, எஸ். காவியா சிறப்புப் பரிசும் பெற்றனர். நிறைவாக, உதவிப்பேராசிரியர் முனைவர் இரா. மாதவி நன்றி கூறினார்.




தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களால் ஒரு லட்சரூபாய் நல்கையில், ஆண்டுதோறும் வேலைவாய்ப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடத்த, ஏற்படுத்தப்பட்டுள்ள அறக்கட்டளை சார்பாக, ஆசிரிய அறநெறி மதிப்புகள் (Ethical and Moral Values of Teachers) எனும் பொருண்மையில் , 16 - 12 - 2019 அன்று பொழிவரங்கம் நடைபெற்றது.

தலைமையுரை ஆற்றிய, பதிவாளர் (பொ) முனைவர் கு.சின்னப்பன், ஆப்ரகாம் லிங்கன், தனது மகன் படிக்கும் பள்ளி ஆசிரியருக்கு எழுதிய கடிதவரிகளை மேற்கோள்காட்டி, பெற்றோரைவிட ஆசிரியர் பங்குபணி எவ்வாறு மேலானதும் வீச்சானதும் என்று சான்றாதாரம் காட்டிப் பேசினார்.

ஆசிரியப்பணி அறப்பணி எனும் பொருண்மையில் பொழிவாற்றிய பேரா.தெ வெற்றிச்செல்வன், லெபனான் நாட்டுக்கவி கலீல்கிப்ரான் வரிகளில் தொடங்கி, ஆசிரியர் தினத்தன்று பரிமாறப்பட்ட, நேசிக்கும் ஆசிரியர்களுக்கான நெகிழ்வான கவிதைகளை எடுத்துக்கூறி, ஆசிரிய அறம், புலமை அறம் இவை சமூகத்தை உய்விக்கும் பாங்கைத் துலக்கப்படுத்தினார். மேலும், ஆசிரியர் மற்றும் கல்வி வரலாற்று நிகழ்வுகளை கதைகள் மூலம் ஈர்ப்புடன் எடுத்துரைத்தார். தொடர்ந்து, அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் முனைவர் ராம்நாத், மூங்கில் வளர்ச்சியை ஒப்புமைப்படுத்தி மாணவர் வளர்ச்சியைக் குறித்துச் சிறப்புரைத்தார். கற்றல் - கற்பித்தலில் தொழில் நுட்பத்தின் பங்கை புதிய இணையச்செயலிகள்... வலைத்தளங்கள் இவற்றின் பின்னணியில் காட்சிப்படுத்தினார். நிகழ்வை, பேரா. தீபா தொகுப்புரைக்க, பேரா. ஆனந்தஅரசு ஒருங்கிணைத்தோடு, வரவேற்புரை நல்க, பேரா. சா. இரவிவர்மன் நன்றியுரைத்தார்.




# இலக்கியத்துறை - அஞ்சுகம் முத்துவேலர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறை சார்பாக, 05.11.2019 அன்று, அஞ்சுகம் முத்துவேலர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. மொழிப்புல முதன்மையர் முனைவர் இரா.காமராசு, தலைமையேற்றார். இலக்கியத் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் ஜெ.தேவி, வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் முனைவர் இளையாப்பிள்ளை, வரவேற்புரையாற்ற, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறைப் பேராசிரியர் முனைவர் ந.வெங்கடேசன் “திரு.வி.க.வின் தமிழ்ப்பணி” என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

திருவாரூர் மு.கருணாநிதி அவர்கள் உருவாக்கிய, இந்த அறக்கட்டளை சார்பாக, திருவாரூர் வி.கல்யாணசுந்தரனாரின் தமிழ்ப்பற்று பற்றிப் பேசுவது, மிகப்பொருத்தமாக அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார். தமிழின் சிறப்பையும், தமிழினத்தின் பெருமையினையும், பொதுவுடைமைச் சிந்தனைகளையும் குறித்து, 54 நூல்களை எழுதி, தனது எளியநடை மூலம் நாட்டுமக்களுக்குக் கொண்டுசேர்த்ததோடு, தமிழ் உரைநடைக்கும் வளம் சேர்த்தவர் திரு.வி.க. எனவேதான், தமிழுக்குக் கிடைத்த இரு திரு விளக்குகள் மறைமலையடிகளாரும் திரு.வி.க.வும் என்றார் அண்ணா. இவரின் தமிழ்ப்பணி தனிச்சிறப்புப் பெற்றது என்பதைத் தமிழுலகம் என்றும் நன்றி மறவாமல் நினைவில் கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இலக்கியத்துறை உதவிப்பேராசிரியர் இரா.தனலெட்சுமி நன்றி நவில, முதுகலைப்பட்ட மாணவி அஞ்சுகம் தொகுப்புரையாற்றினார்.



# அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறையில் அறக்கட்டளைச் சொற்பொழிவு

அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறையில் 08-11-2019 அன்று, அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. 'தமிழும் இணையமும்' எனும் பொருண்மையில் முனைவர் துரை. மணிகண்டன் பொழிவாற்றினார். காலத்திற்கேற்பத் தகவமைத்துக் கொள்ளும் மொழியே எக்காலத்திலும் செவ்வியல் தன்மை பெறும். தமிழ்மொழி அவ்வாறு தகவமைத்துக்கொண்டு இன்று செழுமையுடன் திகழ்கின்றது. இணையத்தில், தமிழ்மொழியைப் பரவலாக்கம் செய்யவேண்டும். எண்ணற்ற கலைச்சொற்களைக் கணினி வழியாக, உலகத்தமிழ் மக்களுக்கு அளிக்க வேண்டும். இன்று, நாம் பயன்படுத்திவரும் புலனம், இணையம், முகநூல், வலைப்பூக்கள் போன்ற சொல்வடிவங்களை அயலகத்தமிழர்களே செம்மைப்படுத்தித் தந்துள்ளனர். சீனா இணைய வளர்ச்சியில் 5-ஜி சேவையில் தடம் பதித்துவருகிறது. இதனால் அங்கு இணையக்கல்வி வளர்ச்சி வெகுவாக வளர்ந்திருக்கின்றது.

இன்றைய இளைஞர்கள், இணையத்தில் பொழுதுபோக்குவதற்குப் பதிலாகப் பயனுள்ள வழியில் வலைப்பூக்கள், வலைத்தளங்கள் போன்றவற்றைச் சொந்தமாகத் தொடங்கி கவிதைகள், கட்டுரைகள், கதைகள் போன்ற படைப்புகளை வெளியிட்டு, தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்.

நிறைவாக, தமிழ் இணையதளங்கள், வலைப்பூக்கள், தமிழ் விக்கிபீடியாவில் கட்டுரைகள் எழுத, திருத்தம் மேற்கொள்ள பயிற்சியளிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் ச. ஈஸ்வரன் அறிவியல் கலைச்சொல்லாக்க வளர்ச்சியில் மொழிபெயர்ப்பின் பங்களிப்பு என்ற தலைப்பில் பல நிகழ்வுகளைச் சான்றுகாட்டி, சுவைபடப் பேசினார். நிகழ்விற்கு, மேனாள் துறைத்தலைவர் முனைவர் இராம. சுந்தரம் தலைமை தாங்க, துறைத்தலைவர் முனைவர் சி. தியாகராசன் அனைவரையும் வரவேற்றார். முனைவர்பட்ட ஆய்வாளர் ரமணி, நன்றியுரையாற்ற ஆய்வாளர் பார்வதி தொகுப்புரையாற்றினார்.



# மெய்யியல் துறை அறக்கட்டளைச் சொற்பொழிவு

*தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறை சார்பாக, 16-11-19 அன்று சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர் தி. ந. இராமச்சந்திரன் சைவ சமய அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது.*

*இக்கருத்தரங்கில், மயிலாடுதுறை, தருமபுரம் ஆதீனக் கலைக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கருணாசேகர், பெரியபுராணத்தில் வாழ்வியல் கோட்பாடுகள் என்ற பொருண்மையில் சொற்பொழிவாற்றினார்.*

*நிகழ்வில், மொழிப்புல முதன்மையர் முனைவர் இரா. காமராசு தலைமை ஏற்க, மெய்யியல் துறைத்தலைவர் முனைவர் பி. பாலச்சந்திரன் வரவேற்றார். உதவிப்பேராசிரியர் தி. பார்த்திபன் நன்றியுரைத்தார்,*

# மெய்யியல் துறை தேசியக்கருத்தரங்கம்

*தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறை சார்பாக, 12.12.2019 மற்றும் 13. 12. 2019 தேதிகளில் கோட்டூர் அரங்கசாமி முதலியார் வைணவ அறக்கட்டளைத் தேசியக்கருத்தரங்கம் நடைபெற்றது.*

*இக்கருத்தரங்கில், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணி நிறைவுபெற்ற, தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் சீ. நம்மாழ்வார், "திருமங்கை ஆழ்வாரின் நாயகிபாவனை" என்ற பொருண்மையிலும், திருவையாறு அரசர் கல்லூரி, வடமொழித்துறைப் பேராசிரியர் முனைவர் என். லெட்சுமிக்குமார், "மாறன் மறைத்தமிழ்" என்ற பொருண்மையிலும், மயிலாடுதுறை திருக்குறள் பேரவைத்தலைவர் முனைவர் சி. சிவசங்கரன் "எட்டெழுத்து மந்திரம்" (இராமானுசம்) என்ற பொருண்மையிலும் சொற்பொழிவாற்றினர்.*

*நிகழ்வில், மொழிப்புல முதன்மையர், முனைவர் இரா. காமராசு தலைமை ஏற்க, மெய்யியல் துறைத்தலைவர் முனைவர் பி. பாலச்சந்திரன் வரவேற்க, உதவிப்பேராசிரியர் முனைவர் கோ. ப. நல்லசிவம், நன்றியுரைத்தார்.*




## இலக்கியத்துறை அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறை சார்பாக, 21.11.2019 அன்று உமறுப்புலவர் மற்றும் எழுத்தாளர் த. ஜெயகாந்தன் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், மொழிப்புலத்தலைவர் முனைவர் இரா. காமராசு தலைமையில் நடைபெற்றன. திருச்சி ஜமால் முகமது கல்லூரி, முன்னாள் தமிழ்த் துறைத்தலைவர், முனைவர் மீ.அ.ச. ஹபீபுர் ரஹ்மான் “ஓசை உடைத்த கவிதைகளில் இசை” என்ற தலைப்பில் சிறப்புரை யாற்றினார். கவிஞர் ரவிசுப்பிரமணியன் தன் இனியகுரல் வளத்தால் பாடல்களைப் பாடி, சுவைபடப் பொழிவாற்றினார். துறைத்தலைவர், பேராசிரியர் முனைவர் ஜெ. தேவி, வரவேற்க, உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. தனலெட்சுமி, நன்றியுரையாற்றினார். முனைவர் பட்ட ஆய்வாளர் க.செல்வமுருகன் தொகுப்புரையாற்றினார்.



## அரிய கையெழுத்துச்சுவடித்துறை - அறக்கட்டளைச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழக அரிய கையெழுத்துச்சுவடித்துறை சார்பாக, 21.11.2019 அன்று, பேராசிரியர் முகிலை இராசபாண்டியனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. சுவடிப்புலத் தலைவர் முனைவர் பா. ஜெயக்குமார் தலைமையேற்றார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன, பதிப்புத்துறை மேனாள் தலைவர், முனைவர் ஆ. தசரசன் பேரா. முகிலை இராசபாண்டியரின் தமிழ் வாழ்வில் படைப்பிலக்கியம் என்ற தலைப்பில் பொழிவாற்றினார். இணைப்பேராசிரியர் முனைவர் த. ஆதித்தன் வரவேற்புரையாற்ற, பேரா. முனைவர் த. கண்ணன் நன்றியுரைத்தார். முனைவர் பட்ட ஆய்வாளர் நீ.அகிலாண்டேஸ்வரி நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.




# அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழக வெள்ளிவிழாப் பன்னாட்டுக் கருத்தரங்கம்

*தமிழ்ப் பல்கலைக்கழக, அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை மற்றும் அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத்தின் சார்பாக, 23.11.2019 அன்று, “அறிவியல் புனைகதைகள், களஞ்சியங்களில் அறிவியல் தமிழ்” என்ற தலைப்பில் 25 - ஆம் ஆண்டு வெள்ளிவிழாப் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத் தலைவர், முனைவர் இராம. சுந்தரம் தலைமையேற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கோ. பாலசுப்ரமணியன், கருத்தரங்க ஆய்வுக்கோவையை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றினார். பொருளாளர், மருத்துவர் சு. நரேந்திரன் மையக்கருத்துரை வழங்கினார். முனைவர் த. தெய்வீகன், நோக்கவுரை ஆற்றினார். முனைவர் அர. கமலதியாகராசன், முனைவர் சி. தியாகராசன், முனைவர் இரா. இந்து ஆகியோர், கலந்துகொண்டனர்.*



# சிற்பக்கலைப் பயிற்சிக்கூடம் - பாடவகுப்புகள் தொடக்கம்

*2018 -19 ஆம் ஆண்டுக்கான, தமிழக அரசு நிதி நல்கையில், தமிழ்ப்பல்கலைக்கழகச் சிற்பத்துறை வாயிலாக நடைபெறும், சிற்பக்கலைப் பயிற்சிக்கூடம் வழங்கும் சான்றிதழ் மற்றும் பெருஞ்சான்றிதழ் படிப்புகளுக்கான பாடவகுப்புகள் 2020 ஜனவரித் திங்கள் 8 ஆம் நாள் அன்று கலைப்புல முதன்மையர் முனைவர் பா. ஷீலா அவர்கள் முன்னிலையில், துணைவேந்தர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. கல்வியாளர்களும், மாணவர்களும் அலுவலக ஊழியர்களும் கலந்துகொண்டனர்.*




# மண்பாத்திரங்கள் பற்றிய தொல்லியல் பணிப்பட்டறை

"மண்பாத்திரங்கள் பற்றிய தொல்லியல்" எனும் தலைப்பில் பன்னாட்டுப் பணிப்பட்டறை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கடல்சார் வரலாறு மற்றும் தொல்லியல் துறையினால் செப்டம்பர் 24, 25, 26, 2019 ஆகிய நாள்களில் நடத்தப்பட்டது. இந்தப்பணிப் பட்டறையில் சிந்துவெளி நாகரிகம் முதல் வடகிழக்கு இந்தியா வரையிலான, இந்தியாவின் பல பகுதிகளில் உருவாக்கப்பட்ட தொல்லியல் பானை வகைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மரபுசார் ஆய்வுத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி வரிசை என்ற திட்டத்தின் பகுதியாக, இந்தப் பணிப்பட்டறை நடத்தப்பட்டு வருகின்றது. இப்பணிப்பட்டறையின் தொடக்கவிழாவில், தமிழ்ப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையுரையாற்றினார். தமிழகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தொல்லியல் இடங்கள் அகழாய்வு செய்யப்பட்டுள்ளன. தமிழ்ப்பல்கலைக்கழகம் கொடுமணல், வல்லம், பெரியபட்டிணம், நாகப்பட்டினம், நாங்கூர் போன்ற தொல்லியல் இடங்களில் அகழாய்வு செய்துள்ளது. சங்கத்தமிழ் இலக்கியங்களில் குயவர்கள், பானைகள் செய்தல் பற்றிய குறிப்புகள் உள்ளன என்று கூறினார். அண்மையில், மதுரைக்கு அருகில் அகழாய்வு செய்யப்பட்ட கீழடி என்ற தொல்லியல் இடத்திற்குத் தான் சென்று பார்வையிட்டபோது, தமிழ் நாகரிக வளர்ச்சியை அங்குப் பானையோடுகளில் எழுதப்பட்ட தமிழ் - பிராமி எனப்படும் தமிழி எழுத்துக்களில் கண்டதாகக் கூறினார். இது போன்ற குறிப்பிட்ட தலைப்புகளிலான பணிப் பட்டறைகள் மாணவர்களின் திறன் மேம்பாட்டிற்கு அவசியம் என்று தெரிவித்தார். பரோடா மகாராஜா சாயஜிராவ் பல்கலைக்கழகப் புலத்தலைவர், பேராசிரியர் கே. கிருஷ்ணன், தொடக்கவுரையாற்றினார். பானை வகைகளை ஆய்வது குறித்த முறைகளை, மாணவர்களுக்குப் பயிற்றுவித்தார். மேலும் இந்திய - பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர், இந்தியத் தொல்லியல் ஆய்வாளர்கள், இந்தியாவில் சிந்துவெளி நாகரிக இடங்களை ஆராய்வதில், ஆர்வம் காட்டினர் என்று கூறினார்.

அமெரிக்காவின் வடமேற்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர், மார்க் ஹௌசெர் சோழமண்டலக் கடற்கரையின் காலனியாதிக்கக் காலப் பானைவகைகள் குறித்துச் சொற்பொழிவாற்றினார். மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க இது போன்ற பணிப்பட்டறைகள் அவசியம் என்றார்.

சுவடிப்புலத் தலைவர் பேராசிரியர் பா.ஜெயக்குமார், கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல்துறைத் தலைவர் முனைவர் வீ.செல்வகுமார், முனைவர் செ. கௌரிசங்கர், முனைவர் அ.சங்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

பரோலி ரோகில் கண்ட் பல்கலைக்கழகத்தின் முனைவர் அனுரப்மிஸ்ரா, கல்கத்தா தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் முனைவர் சர்மி சக்ரபர்த்தி, கேரளப் பல்கலைக்கழகத்தின் எஸ்.வி.இராஜேஷ், தேசிய உயராய்வு நிறுவனத்தின் ஸ்மிரிதிஹரிசரண், குவகாத்தி காட்டன் பல்கலைக்கழகத்தின் மஞ்சில் ஹசாரிகா, பெங்களூரு பல்கலைக்கழகத்தின் அர்ஜுன், கேரளாவின் மார்த்தோமா கல்லூரியின் வினோத் ஆகியோர் பானை வகைகள் குறித்து, சொற்பொழிவாற்றினர்.

# தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் குடியரசு நாள்விழா

தமிழ்ப்பல்கலைக்கழக வளாகத்தில் 26-01-2020 அன்று, 71 - ஆவது குடியரசுநாள் கொண்டாடப்பட்டது. தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரையில், 71 - ஆவது குடியரசுநாள் நல்வாழ்த்துக்கள் கூறியதோடு, மகாத்மா காந்தி உள்ளிட்ட விடுதலைப் போராட்டத் தியாகிகள், விடுதலைபெற்ற இந்தியாவில் மக்களாட்சி சிறப்பாக மலர்ந்திட வழிவகுத்த ஜவஹர்லால் நேரு, ராஜேந்திர பிரசாத், அம்பேத்கர் ஆகியோரை நன்றியோடு நினைவு கூர்ந்தார்.

RUSA நல்கை மூலம் பல்கலைக்கழக உட்கட்டமைப்பு வசதிகள், விளையாட்டரங்கம், ஆய்வகங்கள், வகுப்பறைகள் ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்வதற்கான பணிகளும் ஆய்வுக்கருவிகள், கணினிகள் வாங்குவதற்கான ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன. இது மட்டுமன்றி, தமிழக அரசு கடந்த, ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கிய கரிகாற்சோழன் அரங்கம் உள்ளிட்ட பழைய கட்டடங்களின் சீர்காப்புப் பணிகள், சுற்றுச்சுவர் கட்டும் பணிகள், நூலகத்திலுள்ள பனுவல் அரங்கச் சீரமைப்புப் பணிகளும் நிறைவுறும் போது, உள்கட்டமைப்புகளைப் பொறுத்தவரை தன்னிறைவு அடைந்துவிட முடியும்.

அமையவிருக்கிற கேள்வி - காட்சி ஆய்வகத்தின் மூலமும், புனரமைக்கப்பட இருக்கிற சமூக வானொலி மற்றும் இணையவழி வானொலிச்சேவைகள் இம்மையங்களின் செயல்பாடுகளுக்கு மேலும் வலிமை சேர்க்கும். வெளிநாடுவாழ் தமிழர்களுக்குத் தமிழக அரசின் உதவியுடன் அளிக்கப்பட்டுவரும் தமிழ்மொழி, பண்பாடு தொடர்பான பயிலரங்கம், தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில், ஜனவரி 5 முதல் 14 வரை நடத்தப்பட்டது. இதுபோன்றதொரு பயிலரங்கம், விரைவில் கயானாவிலும் நடத்தப்பட இருக்கிறது. தமிழக அரசின் உதவியில் 15 வருகைதரு பேராசிரியர்கள் நியமிக்கப்படுவர். அதேபோல், தமிழக அரசின் ரூ. 1 கோடி நல்கையில் கால்டுவெல் இருக்கை அமையவிருக்கிறது.

நமது நீண்டகாலக் கோரிக்கையை ஏற்றுத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொகுப்பு நல்கையை 24.91 கோடியாக உயர்த்தித் தந்த தமிழக அரசிற்கு இந்நேரத்தில் உங்கள் அனைவரின் சார்பாக நன்றியை உரித்தாக்குகிறேன் என்றார்.

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) முனைவர் கு.சின்னப்பன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவ மாணவிகள் ஆகியோர் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.







## அகராதியியல் துறையின் அறக்கட்டளைச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழக அகராதியியல் துறையின் சார்பாக, பேராசிரியர் சுந்தர சண்முகனார், முனைவர் ச. மெய்யப்பனார் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், பதிவாளர்(பொ) முனைவர் கு.சின்னப்பன் தலைமையில் 20-11-2019 அன்று நடைபெற்றன. தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் தமிழ்ப்பண்டிதர் மணி. மாறன் “பதிப்பியல் சார் அனுபவங்கள்” எனும் பொருண்மையிலும், தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசு கலைக்கல்லூரி ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் ராஜேஷ் “அகராதி உருவாக்கமும் திறன்பேசியும்” எனும் பொருண்மையிலும் பொழிவு ஆற்றினர். அகராதியியல் துறைத்தலைவர் முனைவர் உ. பாலசுப்பிரமணியன் வரவேற்க, இணைப்பேராசிரியர் முனைவர் செ. த. ஜாக்குலின் நன்றியுரைத்தார். இணைப்பேராசிரியர் முனைவர் சி. வீரமணி நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

## செய்தித்துளிகள்.... செய்தித்துளிகள்.... செய்தித்துளிகள்....

▶ கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறையின் சார்பில் பானை மரபுகளும் பானைத் தொழிலும் என்ற தலைப்பில், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்திலுள்ள, திருநாங்கூரில் இந்திய அரசு தொல்லியல் துறை அனுமதியுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் சங்ககாலம் முதல் நவீன காலம் வரையிலான கருப்பு சிவப்பு பானை வகைகள், மீன்உருவம், மாட்டுவண்டி உள்ள பனையோட்டுக் கீறல் குறியீடுகள், இரும்புப் பொருள்கள், கூறைஓடுகள் செங்கற்கள், சுடுமண் பொம்மைகள், கண்ணாடிமணிகள், கல்மணிகள், கிடைத்துள்ளன. மேலும், வாழ்விடச் சான்றுகள் நான்கு மீட்டர் ஆழத்திற்குமேல் கிடைத்துள்ளன. ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

▶ புதுதில்லி தேசியச் சுவடிகள் இயக்ககம் (NMM) மூலம், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சுவடிகள் பாதுகாப்பு மையம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. ஓலைச்சுவடித் துறையும் இலண்டன் பிரிட்டிஷ் நூலகமும் இணைந்து, தமிழ்ச் சுவடிகளை மின்மயமாக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

▶ தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் ஆஸ்திரேலியா, மலேசியா, ஐக்கிய அமெரிக்கா, சிகாகோ, இலங்கை, தைவான், ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில், நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொள்ளப் பயணம் மேற்கொண்டனர்.

▶ கோபேயமட்ட ஜப்பான் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, மரபு மேலாட்சி மற்றும் சுற்றுலா வளர்ச்சி குறித்த கருத்தரங்கு, கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை சார்பில், ரூ.2.00 இலட்சம் நல்கையில் நடத்தப்பெற்று நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

▶ ரூ.50.00 இலட்சம் மதிப்பில் சிற்பக்கலைப் பயிற்சித் திட்டமும் ரூ.330.05 இலட்சம் மதிப்பில் கரிகாற் சோழன் கலையரங்கம் மேம்பாட்டுப் பணியும் ரூ.349.60 இலட்சம் மதிப்பில் 25 ஆண்டுகள் பழமையான கட்டடங்கள் சீர்காப்பும் ரூ.159.00 இலட்சம் மதிப்பில் முதற்கட்ட வளாகச் சுற்றுச்சுவர் கட்டும் பணியும் ரூ.50.00 இலட்சம் மதிப்பில் நூலகம் - மின்னணு நூலகமாக மாற்றியமைக்கும் பணியும் ரூ.40.00 இலட்சம் மதிப்பில் நூலகப் பனுவல் அரங்க மேம்பாடும் ரூ.200.00 இலட்சம் மதிப்பில், நூல்கள் மறுபதிப்பும் ரூ.10.00

இலட்சம் மதிப்பில், செவித்திறன் குன்றிய மற்றும் பார்வையற்ற அரசுப்பள்ளி மாணவர்களுக்கும், தஞ்சாவூர் வாழ் பொதுமக்களுக்கும் யோகா மையமும், ரூ.10.00 இலட்சம் மதிப்பில், அரிய நூல்கள் மின்னாக்கமும், சீர்காப்பு மற்றும் மேம்பாட்டு வசதிகள் - ரூ.6.00 கோடி, புதிய கருவிகள் மற்றும் ஏனைய வசதிகள் - ரூ.4.00 கோடி எனப் பகுக்கப்பட்டு, ஒருங்கிணைந்த உயர்கல்வி மேம்பாட்டுத் திட்டம் மூலம் (RUSA 2019 - 2020) முதல் தவணையாக ரூ.10 கோடி பெறப்பட்டு, தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வித் துறையின் கீழ் செயல்பட்டுவரும் தொழில்நுட்பக் கல்வி வட்டத்தின் வழி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள் விளையாட்டரங்கம் மற்றும் பார்வையாளர் மாடம் ஆகியன கட்டப்பட்டு வருகின்றன. அறிவியல் புலம் மற்றும் வளர்தமிழ்ப் புலம் ஆகிய கட்டடங்களின் மேல்தளங்கள் ரூ.4.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் சோதனைக்கூடம் மற்றும் வகுப்பறைகள் அடங்கும்.

▶ தமிழ்ப் பல்கலைக்கழக கரிகாற்சோழன் கலையரங்க வளாகத்தில், ரூ.94.55 இலட்சம் மதிப்பீட்டில், பன்னோக்குக் கூடம் (Multi purpose Hall) கட்டப்பட்டு வருகின்றது. ரூ.48.30 இலட்சம் மதிப்பீட்டில் பதிப்புத்துறை / அச்சக விரிவாக்கக் கட்டடப்பணி தொடங்கப்பட உள்ளது. மொழிப்புலக் கட்டடம் (ரூ.47.00 இலட்சம்), நூலகக் கட்டடம் (ரூ.23.50 இலட்சம்), அலுவலகக் கட்டடம் (ரூ.35.00 இலட்சம்), புலவிருந்தகக் கட்டடம் (ரூ.27.50 இலட்சம்), குடில்கள் சீர்காப்பு - சுற்றுச்சுவர் கட்டுதல் (ரூ.180.00 இலட்சம்) உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. புதிதாக இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் (ரூ.18 இலட்சம்), நடைபாதை மற்றும் அணுகுசாலைகள் ரூ.165.00 இலட்சம், பசுமை கவின் பரப்புப் பணிகள் ரூ.14.00 இலட்சம் மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்பட உள்ளன. ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் மின் அமைப்புகளைப் புதுப்பிக்கவும், புதிதாக இயங்கேணி ஒன்றை அலுவலகக் கட்டடத்தில் அமைக்கவும், நூலகப் பனுவல் அரங்கில் தண்வளி அமைப்பு ஏற்படுத்தவும், தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வித் துறையின்கீழ் செயல்பட்டுவரும் தொழில்நுட்பக் கல்வி வட்டத்தின் வழி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரூ.73.00 இலட்சம் மதிப்பீட்டில் 8 திறன்மிகு பொலிவுறு வகுப்பறைகளுக்குத் (Smart Classrooms) தேவையான தளவாடங்கள் வாங்கப்பட்டுள்ளன. சித்தமருத்துவம், நிலஅறிவியல், தொல்லறிவியல், சுற்றுச்சூழல், அரிய கையெழுத்துச்சுவடி, ஓலைச்சுவடி, கடல்சார் வரலாறு, உளவியல், கணினி அறிவியல் போன்ற துறைகளிலுள்ள ஆய்வுக்கூடங்களுக்குத் தேவையான கருவிகள் வாங்குவதற் காக, ரூ.86.86 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில், 2011 - ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட, தமிழ்ப் பல்கலைக் கழகப் பண்பலை வானொலி நிலைய சேவையைப் புதுப்பிக்கும் வகையிலும், நீண்ட அலைவரிசைக் கொண்ட இணையவழிப் பண்பலை வானொலி நிலையமாக உருவாக்குவதற்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கண்காணிப்பு ஒளிப்படக் கருவி (CCTV) அமைப்பிற்கு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ரூ.14.30 இலட்சம் மதிப்பீட்டில் தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஏனைய கருவிகள், தளவாடங்கள் வாங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிஜி மற்றும் கயானா நாட்டில் வாழும் தமிழ் ஆசிரியர்களுக்கும், தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கும் ரூ.100.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் இராபர்ட் கால்டுவெல் ஆய்வு இருக்கை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரூ.29.64 இலட்சம் செலவில் 36 ஆண்டுகள் பழமையான பழுதுற்ற புதை மின்வடத்தை மாற்றி, புதிய மின்வடம் அமைக்கவும், தமிழ்ப் பல்கலைக்கழக மின் அமைப்புகளைச் சிறப்புச் சீர்காப்புச்செய்தல் திட்டத்தின்கீழ், புதுப்பிக்கவும் ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. ரூ.36.00 இலட்சம் நல்கையில் வருகைதரும் பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

### தமிழ் வளர் மையம்

அமெரிக்கா, "ஜெர்மனி தமிழ் ஒன்றியப்பள்ளி, தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரிலுள்ள மியர்பேங்க் தமிழ்ப்பள்ளி" உள்ளிட்ட நாட்டுத் தமிழமைப்புகள் மார்ச் 2020 - இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவுள்ளன.

இந்தியாவின், பிற மொழிகள் பேசும் மாநிலங்களில், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மற்றும் தாய்மொழியாகக் கொண்டிராதவர்களுக்காக, தமிழ் வளர் மையங்கள் அமைக்கும் பணி, செவ்வனே நடைபெற்று வருகின்றது. புதுதில்லியில், தமிழ்நாடு இல்லத்திலும், அசாம் மாநிலத்தில் உள்ள கவுகாத்திப் பல்கலைக்கழகத்திலும், தமிழ் வளர் மைய வகுப்புகள் கடந்த 4 மாதங்களாக நடைபெற்று வருவதுடன், அந்தமான் தமிழர் சங்கம், விசாகப்பட்டினம் தமிழ்க்கலை மன்றம், நவிமும்பைத் தமிழ்ச்சங்கம், ஆந்திராவின் குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை ஆகிய வற்றுடன், மிக விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ள முடிவு எட்டப்பட்டுள்ளது.

### தமிழ்ப் பண்பாட்டு மையம்

இதுவரை, 22 உள்நாட்டு/வெளிநாட்டு அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### மாணவர் கலை, பண்பாட்டு விழாக்கள்

▶ தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களின் கலை ஈடுபாட்டை மேம்படுத்த, பல்வேறு நாட்டுப்புற இசைக் கருவிகளான பறை, உறுமி, கொம்பு, துடும்பு போன்ற கருவிகள் வாங்கப்பட்டு, 35 மாணவ மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டது. மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் பொங்கல் விழாவில் அரங்கேற்றப்பட்டன.

▶ தமிழ்ப் பல்கலைக்கழக மாணவ மாணவிகளுக்கு விளையாட்டு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகக் கபடி அணியினர், நவம்பர் 2019 - இல் மங்களூரில் நடைபெற்ற தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டியில், கலந்து கொண்டனர். செப்டம்பர் 2019 - இல் தஞ்சாவூரில் மாநில அளவில் நடைபெற்ற கபடிப் போட்டியில் முதலிடம் பெற்றனர். சனவரி 2020 - இல் தஞ்சாவூர், பெரியார் மணியம்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற, மாநில அளவிலான கபடிப் போட்டியில் கலந்துகொண்டனர்.

▶ பல்கலைக்கழகக் கைப்பந்து அணியினர் விஜயவாடாவில் நவம்பர் 2019 - இல் தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்டனர்.

## நாட்டு நலப்பணித்திட்டம்

▶ டிசம்பர் 2019 - இல் நாட்டு நலப்பணித்திட்டம் மூலம் தோட்டப்பிரிவின் வழியாக 1200 பனை விதைகள் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகம் முழுவதும் விதைக்கப்பெற்றன.

## பதிப்புத்துறை

▶ தமிழ்ப் பல்கலைக்கழக விற்பனைப் பிரிவிலும், ஈரோடு மற்றும் சென்னையில் நடைபெறும் புத்தகக்கண்காட்சி களிலும் 2019 - 20ஆம் ஆண்டில், ரூபாய் 9,49,379/- மதிப்பில் நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் நூலகம்

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் 1,83,512 நூல்கள் உள்ளன. இவற்றை மாணவர்கள், ஆய்வாளர்கள், பொது மக்கள் பயன்படுத்திவருகின்றனர். 01.01.2019 முதல் 31.12.2019 ஆம் நாள் முடிய நூல்சேர்க்கைப் பிரிவில் கல்வியாளர்களின் திட்டம் மற்றும் களஞ்சிய மையம் வழியாகத் தமிழில் 1704 நூல்களும், ஆங்கிலத்தில் 674 நூல்களும், அன்பளிப்பாக 633 நூல்களும் பெறப்பட்டு, மொத்தம் 3011 நூல்கள் புதிதாக நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

## தொலைநிலைக்கல்வி

பல்கலைக்கழக மானியக்குழுவின் அனுமதியின் அடிப்படையில், 2020 நாட்காட்டி ஆண்டுக்கான 15 முதுநிலை பட்டப்படிப்புகளும், இளங்கல்வியியல் படிப்பு களுக்கான சேர்க்கை நடைபெற்று வருகின்றன. 6 முதுநிலைப் பட்டயப் (Post Graduate Diploma) படிப்புகளும், 26 பட்டயப் (Diploma) படிப்புகளும், 13 சான்றிதழ் (Certificate courses) படிப்புகளும், அடிப்படைக் கல்வியாக அறிமுகநிலைப் படிப்பு என 56 பாடப்பிரிவுகளில் சேர்க்கை நடைபெற்று வருகின்றது. மேற்கண்ட படிப்புகளில் 3000 மாணவ, மாணவியர்களும் சேர்க்கைபெற்று பயின்று வருகின்றனர். 2020 - 2021 கல்வியாண்டு முதல், துறைகள் சார்ந்த பாடங்கள் மட்டும் நடத்த முடிவு செய்யப்பட்டு, 19 பாடங்களுக்கு அங்கீகாரம் கோரி பல்கலைக்கழக நல்கை ஆணையத்திற்கு கருத்துரு அளிக்கப்பட்டுள்ளது.

## அறக்கட்டளை நிதிச் செயல்பாடுகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள 81 அறக்கட்டளைகளிலிருந்து ஈட்டப்பெறும் வட்டியிலிருந்து சிறப்புச் சொற்பொழிவுகளும், பரிசுப் போட்டிகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. 2020 - 2021 ஆம் ஆண்டில் ரூ.17,53,900/- வட்டி ஈட்டப்பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## எதிர்காலத் திட்டங்கள்

➤ தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் குன்றம் பகுதியில் அருங்காட்சியகத்தை மாற்றிடவும், கீழடி ஆய்வுக் காட்சி அரங்கத்தைத் தமிழக அரசின் தொல்லியியல் துறையின் உதவியுடன் நிரந்தரமாக அமைத்திடவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

➤ வளாகத்தில் நடப்பட்ட தைலமரங்கள் தற்பொழுது 15 ஆண்டுகளுக்குப்பிறகு, தமிழ்நாடு காகித ஆலை நிறுவனம் வழியாக மூன்றாம் கட்ட வெட்டும்பணி நடைபெற்று வருகிறது. தைல மரங்களின் ஆயுள் நிறைவடைந்துள்ளதால் வேருடன் அகற்றவும், தமிழக அரசின் வனத்துறை உதவியுடன் ஏறத்தாழ 500 ஏக்கர் அளவிற்குப் புதிதாக மரங்கள் நடுவதற்கும், முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாநகரத்தின் சுவாசப்பையாகத் திகழும் தமிழ்ப் பல்கலைக் கழகப் பசுமை வளாகம் மேலும் மேம்படுத்தப்படும்.

## கதிரொளித் திட்டம் (Solar Energy)

➤ தமிழக அரசின் மின்சக்தி மேம்பாட்டு முகாமை (TEDA) வழியாக மகளிர் விடுதிகள் மற்றும் மூலிகைப்பண்ணை ஆகியவற்றின் கதிரொளித் திட்டத்தினை 25 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

➤ தமிழ்ப் பல்கலைக்கழகம் உயராய்வு நிறுவனமாக உள்ள நிலையில் முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம், கல்வியியல் பட்டப்படிப்பு ஆகிய படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், மாணவர்கள் சேர்க்கை குறைந்து வருகிறது. தற்போது, ஒருங்கிணைந்த முதுகலை வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இருப்பினும், பல்கலைக்கழகக் கல்லூரி (University College) ஒன்று தொடங்கப்படுமானால், மேல்நிலைப் பள்ளிப்படிப்பு முடித்தவுடன் இளம் பருவத்திலேயே தமிழாய்வுகளுக்கு ஆற்றுப்படுத்த முடியும். கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசை நிர்ணய அமைப்பில் - (NIRF-National Institutional Ranking Framework) தமிழ்ப் பல்கலைக்கழகம் இணைவதற்கு, குறைந்த அளவில் 1000 மாணவர்கள் தேவை என்ற நிலையினை, எளிதில் அடைய முடியும். நடுவண் அரசின், மனித வளமேம்பாட்டுத் துறையின் நல்கைகள், இந்த தரநிர்ணயங்கள் படியே வழங்கப்பட்டு வருவதால் இனிவரும் காலங்களில் இந்த அமைப்பில் இணையவேண்டிய தேவை உள்ளது. ஆதலால் வரும் கல்வி ஆண்டில் பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றைத் தொடங்குவது இன்றியமையாத ஒன்றாகும் என உணரப்பட்டுள்ளது.




மதிப்புறு முனைவர் (D.Litt) பட்டத்தினைப் பெறும் ஆய்வு ஆளுமை ஆ.சிவசுப்பிரமனியன்




மதிப்புறு முனைவர் (D.Litt) பட்டத்தினைப் பெறும் வண்ணதாசன் (கல்யாண்ஜி)




மதிப்புறு முனைவர் (D.Litt) பட்டத்தினைப் பெறும் மொரிசீயஸ் நாட்டு முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் பரசுராமன்




# இந்தியாவின் முதல் நடமாடும் நூலகம்

இந்தியாவின் முதல் நடமாடும் நூலகம், 1931-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 21-ஆம் நாள், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகேயுள்ள,மேலவாசல் என்ற கிராமத்தில், பொறியாளர், திரு எஸ். வி. கனகசபைப்பிள்ளை என்பவரால் தொடங்கப்பட்டது. இந்த நடமாடும் நூலகத்தின், நூல்களைக் கிராமங்கள் தோறும் எடுத்துச்செல்வதற்கு, இரட்டை மாடு பூட்டிய மாட்டுவண்டி பயன்படுத்தப்பட்டது.

இந்நடமாடும் நூலகம், மன்னார்குடியைச்சுற்றி, 95 கிராமங்களுக்குப் பயணம் செய்திருக்கிறது. இந்தியாவில் முதல் நடமாடும் நூலகத்தைத் தொடங்கிவைத்த பெருமை, இந்திய நூலகவியலின் தந்தை டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் அவர்களைச் சாரும்.

இதில் பயணம் செய்த நூல்கள், சிறப்புச் சேகரிப்பு நூல்களாகத் தற்போது, தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.